# இஸ்லாமியப் பார்வைக்குள் படைப்பிலக்கியம்


அஷ்ஷைக் எம்.ஏ.ஹபீழ் ஸலபி,ரியாதி (M.A)


தொடர் – 06


## கவிகோ அப்துர் ரஹ்மானின் கவிதைகள்

கவிகோ அப்துர் ரஹ்மான் பிரபலமானவர். தற்போது அவர் இறந்துவிட்டார். புகாரி மொழிபெயர்ப்புக் குழுவில் கூட அங்கம் வகித்தார். ஆனால், அல்லாஹ்வின் சட்டங்களை விமர்சித்து எழுதியுள்ளார். அவற்றில் சில கவிதைகளை இங்கே சுட்டிக்காட்டியுள்ளோம்.

கவிகோ அப்துர் ரஹ்மானின் சில கவிதைகளில் மாக்ஸிய சிந்தனையை முன்வைத்துள்ளார். தனது "பசி எந்தச் சாதி? என்ற நூலில் அல்குர்ஆன் கூறும் குற்றவியல் சட்டங்களை கடுமையாக விமர்சித்துள்ளார், சமநிலைச் சமுதாய சிந்தனையை வரித்துக்கொண்ட அவரின் வரிகளை சற்று அவதானித்துப் பாடுங்கள்.





## பண்பின் சிகரம்

**நா**ம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மற்ற மனிதர்களோடு சேர்ந்தே வாழ வேண்டியிருக்கிறது.

மனிதர்கள் எல்லோரும் நல்லவர்கள் அல்லர். அவர்களில் தீயவர்களும் இருக்கிறார்கள்.

தீயவர்கள் நமக்குத் தீங்கு செய்யும்போது அதற்குப் பழி வாங்க வேண்டும் என்ற உணர்வு எழுவது இயற்கை.

ஆனால் ஒவ்வொருவரும் கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று பழிவாங்கத் தொடங்கிவிட்டால் உலகத்தில் ஊனமுடையவர்கள் மட்டுமே இருப்பார்கள்.

பொறுமை இல்லாதவர்களால்தான் உலகத்தில் பிரச்சினைகள் உண்டாகின்றன.

பொறுமை உடையவர்களோ சாந்தியின் தூதுவர்களாக இருக்கிறார்கள்.

உலகம் அத்தகையவர்களால்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறது.
ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் குடும்ப வாழ்க்கை பொறுமைக்குப் பயிற்சிக் களமாக அமைந்திருக்கிறது.

குடும்பம் சமூகத்தின் அடிப்படை அலகு.
குடும்பத்தில் பொறுமையைக் கற்றுக் கொண்டவன் சமூக வாழ்க்கைக்குத் தகுதியுடையவனாகிறான்.

பொறுமை என்ற உயர்ந்த ஒழுக்கத்தைக் காலந் தோறும் சான்றோர்கள் போதித்து வருகிறார்கள்.

> **ஒருவன் உன்னை வலது கன்னத்தில்**
> **அறைந்தால் அவனுக்கு**
> **மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு**
> ***(மத்தேயு 5.39)***

என்கிறார் இயேசு பெருமான்.

தன்னை அறைந்தவனைத் திருப்பி அறைய வேண்டும் என்று நினைப்பதுதான் உலக இயற்கை.

அறைந்ததைப் பொறுத்துக் கொள்வதே பெரிய விஷயம்.
இயேசு பெருமானோ 'நீ திருப்பி அறையாதே. அறைந்தவன் திருப்பி உன்னையே அறைய உன் மறு கன்னத்தையும் காட்டு' என்கிறார்.

இதென்ன பைத்தியக்காரத்தனம் என்று தோன்றலாம். ஆனால் இதில் சாந்தியின் வித்து இருக்கிறது.
அறைந்தவனைத் திருப்பி அறைந்தால் அவனும் திருப்பி அடிப்பான். சண்டை முற்றும். பிறகு இதில் சாதி, மதம், இனம் எல்லாம் சேர்ந்து கொள்ளும்.

M.A.Hafeel Salafi

தனிப்பட்ட இருவருடைய சண்டை பெரிய கலவரமாகி விடும்.

அறைந்ததைப் பொறுத்துக் கொள்கிறவன் ஒரு பெரிய கலவரம் நிகழாமல் தடுத்துவிடுகிறான்.

அதுமட்டுமல்ல அறைந்தவனுக்கு மறு கன்னம் காட்டினால், அறைந்தவன் திடுக்கிடுவான்.

'இத்தகைய நல்லவனையா அறைந்தோம்?' என்று வருந்துவான். அதனால் திருந்துவான்.

எனவே பொறுத்துக் கொண்டவன் ஒரு தீயவனை நல்லவனாக்கி விடுகிறான். பகைமைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிடுகிறான்.

இயேசு பெருமானின் இந்தப் பொன்மொழியைப் பொறுமையின் உச்சம் என்று உலகம் போற்றிக் கொண்டாடுகிறது.

ஆனால் திருவள்ளுவரோ இதற்கும் மேலே போகிறார்.

**'ஒருவன் உனக்குத் தீமை செய்தால்**
**அதற்கு மாறாக நீ**
**அவனுக்கு நன்மையைச் செய்'**

என்கிறார்.

**இன்னா செய்தாரை ஒறுத்தல்**
**அவர் நாண**
**நன்னயம் செய்து விடல்**
**(குறள் 314)**

இயேசு பெருமானின் வார்த்தைகளை வைத்தே இதை விளக்குவதாக இருந்தால், ஒருவன்

உன்னை அறைந்தால் நீ அறைந்த கைக்கு மோதிரம் போட்டு விடு என்று அர்த்தம்.

தண்டிக்க நினைப்பதுதான் மனித இயற்கை. எனவே இந்த இயற்கைப்படியே 'உனக்குத் தீங்கு செய்தவனைத் தண்டிக்கத்தானே விரும்புகிறாய்? இதோ இதுதான் தண்டனை. அவனுக்கு நீ நன்மையைச் செய்' என்கிறார் வள்ளுவர்.

இது எப்படி தண்டனை ஆகும் என்று கேட்கலாம். உண்மையில் இதுதான் கொடிய தண்டனை. அடித்தவனைத் திருப்பி அடித்தால் அவனுக்குக் கொஞ்ச நேரம் வலிக்கலாம். பிறகு வலி போய்விடும்.

காயம் ஏற்பட்டால் கூட ஆறிவிடும். ஆனால் தீமை செய்தவனுக்கு நன்மை செய்வது என்பது அவனுடைய இதயத்தில் அடிப்பதாகும். இந்த அடியின் வலி தீராது. அவன் நினைக்கும் போதெல்லாம் வலிக்கும்.

இத்தகையவனுக்கா தீங்கு செய்தோம் என்று நினைந்து நினைந்து வருந்துவான்.

இந்தக் காயம் ஆறாது.

பரிமேலழகர் உரைப்படி இந்தக் குறளில் இன்னொரு கருத்தும் இருக்கிறது. தீமை செய்தவனுக்கு நன்மை செய்வதோடு, அவன் செய்த தீமையையும், நீ செய்த நன்மை யையும் மறந்து விடு என்பது பரிமேலழகர் கருத்து.

மனிதர்கள் எல்லோரும் நல்லவர்கள் அல்லர்

அவர்களில் தீயவர்களும் இருக்கிறார்கள்.

தீயவர்கள் நமக்குத் தீங்கு செய்யும்போது அதற்குப்

பழி வாங்க வேண்டும் என்ற உணர்வு எழுவது இயற்கை.

ஆனால், ஒவ்வொருவரும் கண்ணுக்குக்

கண், பல்லுக்குப் பல் என்று பழிவாங்கத்

தொடங்கிவிட்டால் உலகத்தில் ஊனமுடையவர்கள்

மட்டுமே இருப்பார்கள்.

பொறுமை இல்லாதவர்களால்தான் உலகத்தில்

பிரச்சினைகள் உண்டாகின்றன.

பொறுமை உடையவர்களோ சாந்தியின் தூதுவர்களாக

இருக்கிறார்கள்.

உலகம் அத்தகையவர்களால்தான் வாழ்ந்து

கொண்டிருக்கிறது.

ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் குடும்ப வாழ்க்கை

பொறுமைக்குப் பயிற்சிக் களமாக அமைந்திருக்கிறது.

குடும்பம் சமூகத்தின் அடிப்படை அலகு.

குடும்பத்தில் பொறுமையைக் கற்றுக் கொண்டவன்

சமூக வாழ்க்கைக்குத் தகுதியுடையவனாகிறான்.

பொறுமை என்ற உயர்ந்த ஒழுக்கத்தைக் காலந்

தோறும் சான்றோர்கள் போதித்து வருகிறார்கள்.

ஒருவன் உன்னை வலது கன்னத்தில்

அறைந்தால் அவனுக்கு

மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு (மத்தேயு 5.39)

என்கிறார் இயேசு பெருமான்.

தன்னை அறைந்தவனைத் திருப்பி அறைய வேண்டும்

என்று நினைப்பதுதான் உலக இயற்கை.

அறைந்ததைப் பொறுத்துக் கொள்தே பெரிய விஷயம்.

இயேசு பெருமானோ 'நீ திருப்பி அறையாதே.

அறைந்தவன் திருப்பி உன்னையே அறைய உன் மறு கன்னத்தையும் காட்டு' என்கிறார்.

இதென்ன பைத்தியக்காரத்தனம் என்று தோன்றலாம்.

ஆனால், இதில் சாந்தியின் வித்து இருக்கிறது.

அறைந்தவனைத் திருப்பி அறைந்தால் அவனும் திருப்பி அடிப்பான். சண்டை முற்றும். பிறகு இதில் சாதி, மதம், இனம் எல்லாம் சேர்ந்து கொள்ளும்.

தனிப்பட்ட இருவருடைய சண்டை பெரிய கலவரமாகிவிடும்.

அறைந்ததைப் பொறுத்துக் கொள்கிறவன் ஒரு பெரிய கலவரம் நிகழாமல் தடுத்துவிடுகின்றான்.

அதுமட்டுமல்ல அறைந்தவனுக்கு மறு கன்னம் காட்டினால், அறைந்தவன் திடுக்கிடுவான்.

"இத்தகைய நல்லவனையா அறைந்தோம்?" என்று வருந்துவான். அதனால் திருந்துவான்.

எனவே பொறுத்துக்கொண்டவன் ஒரு தீயவனை நல்லவனாக்கி விடுகிறான். பகைமைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிடுகிறான்.

இயேசு பெருமானின் இந்தப் பொன்மொழியைப் பொறுமையின் உச்சம் என்று உலகம் போற்றிக் கொண்டாடுகிறது.

ஆனால், திருவள்ளுவரோ இதற்கும் மேலே போகிறார்.

'ஒருவன் உனக்குத் தீமை செய்தால்
அதற்கு மாறாக நீ
அவனுக்கு நன்மையைச் செய்'
என்கிறார்.

இன்னா செய்தாரை ஒறுத்தல்

அவர் நாண

நன்னயம் செய்து விடல் (குறள் 314)

இயேசு பெருமானின் வார்த்தைகளை வைத்தே

இதை விளக்குவதாக இருந்தால், ஒருவன்

உன்னை அறைந்தால் நீ அறைந்த கைக்கு

மோதிரம் போட்டு விடு என்று அர்த்தம்

தண்டிக்க நினைப்பதுதான் மனித இயற்கை எனவே

இந்த இயற்கைப்படியே 'உனக்குத் தீங்கு செய்தவனைத்

தண்டிக்கத்தானே விரும்புகிறாய்? இதோ இதுதான்

தண்டனை. அவனுக்கு நீ நன்மையைச் செய்'

என்கிறார் வள்ளுவர்.

இது எப்படி தண்டனை ஆகும் என்று கேட்கலாம்.

உண்மையில் இதுதான் கொடிய தண்டனை.

அடித்தவனைத் திருப்பி அடித்தால் அவனுக்குக்

கொஞ்ச நேரம் வலிக்கலாம். பிறகு வலி

போய்விடும்.

காயம் ஏற்பட்டால் கூட ஆறிவிடும்.

ஆனால், தீமை செய்தவனுக்கு நன்மை செய்வது

என்பது அவனுடைய இதயத்தில் அடிப்பதாகும்

இந்த அடியின் வலி தீராது. அவன் நினைக்கும்

போதெல்லாம் வலிக்கும்.

இத்தகையவனுக்கா தீங்கு செய்தோம் என்று

நினைத்து வருந்துவான்.

இந்தக் காயம் ஆறாது

பரிமேலழகர் உரைப்படி இந்தக் குறளில்

இன்னொரு கருத்தும் இருக்கிறது.

தீமை செய்தவனுக்கு நன்மை செய்வதோடு,

அவன் செய்த தீமையையும், நீ செய்த நன்மை

யையும் மறந்து விடு என்பது பரிமேலழகர்

கருத்து. (பசி எந்தச் சாதி? பக்கம்: 116-119)

இக்கவிதையைப் படிக்கும் போதே, கவிக்கோ எத்தகைய சிந்தனையை விதைக்கின்றார் என்று தெரிந்து விடும். இன்னும், அவரது இஸ்லாமிய அடிப்படை பற்றிய தெளிவற்ற போக்கை அவரது கவிகைளப் படிக்கும் போது தெரிந்துகொள்ளலாம்.

## ஆதிமூலம்

இந்து மதம், கிறித்துவம், இஸ்லாம் இவை மூன்றும்
ஒன்றுக்கொன்று முரணானவை என்று பலரும்
கருதுகின்றனர்.

மேலோட்டமான பார்வையில் இவை வேறுபட்டவை
களாகவே தெரியும்.

ஆனால் இந்தச் சமயங்களின் மூல நூல்களை
ஆராய்ந்து பார்த்தால்,
அடிப்படை தத்துவத்தில் இவை ஒன்றாக
இருப்பதைக் காணலாம்.

எடுத்துக்காட்டாக ஒன்றைப் பார்ப்போம்.
படைப்புகளுக்கு ஆதிமூலம் எது? எது முதலில்
உண்டாயிற்று? எதிலிருந்து எல்லாப் படைப்புகளும்
தோன்றின? என்ற கேள்விகளுக்கு இந்த
மூன்று சமயங்களும் ஒரே விடையைச் சொல்கின்றன.

அந்த விடை, ஞானம்.

இந்து மதத்தின் வேதங்களும் உபநிடதங்களும்
ஞானத்திலிருந்தே எல்லாப் படைப்புகளும்
தோன்றின என்று கூறுகின்றன.

இந்த நூல்கள் ஞானத்தை பிரம்மம் எனக்
கூறுகின்றன.
ரிக் வேதத்தில் 'ப்ரஹ்மன்' என்ற சொல் ஞானம்
என்ற பொருளில் கையாளப்படுகிறது.

பிரம்மம், சத்யம், ஞானம் என்பவை ஒரே
பொருளை உடையன என்று தைத்ரீயோபநிடதம் (2..1II).
கூறுகிறது.

பிரம்மம் என்ற பெயருடைய ஞானத்திலிருந்தே
சகல படைப்புகளும் உண்டாயின என இந்த நூல்கள்
கூறுகின்றன.

பிரஹ்மன் என்ற சொல்லின் வேர் 'ப்ருஹ்'
இதற்கு வளர்வது, வெடித்துக் கிளம்புவது, பொங்கிப்
பீறிடுவது என்று பொருள்.

மாத்வர் இதற்கு 'எல்லாப் பண்புகளும்
முழுமையாக இருக்கும் பொருள்' என்று அர்த்தம்
கூறுகிறார்.

பிரம்மமே அதாவது ஞானமே முதலில் படைக்கப்
பட்டது (ப்ரஹ்ம ப்ரதமஜம்) என்றும், அதிலிருந்தே
சகல படைப்புகளும் உண்டாயின என்றும் வேதங்
களும் உபநிடதங்களும் கூறுகின்றன.

**பிரம்மத்தை விடப் புராதனமானதும்**
**பிரகாசமானதும் வேறொன்றுமில்லை**

என்று சதபத பிராமணம் (10.3.5.2) கூறுகிறது.

இது ஆதியில் பிரம்மமாகவே இருந்தது.
'நான் பிரம்மமாக இருக்கிறேன்' என்று
இது தன்னைத் தானே உணர்ந்தது. அதினின்று
இது அனைத்துமாக ஆயிற்று (1.4.10)

என்றும்,

பிரம்மம் சத்தியத்தின் சத்தியம்;
உள்ள பொருள் அனைத்துக்கும்
மூலாதாரம் (2.1)

என்றும் ப்ருஹதாரண்ய உபநிடதம் கூறுகிறது.

*இந்த உலகம் எல்லையற்ற*
*பிரம்மத்திலிருந்து உண்டானது (5.12)*

என்று சாந்தோக்ய உபநிடதம் கூறுகிறது.

உண்டாகிய உயிர்களெல்லாம்
எதனிடமிருந்து உண்டாயினவோ,
உண்டாகியவை எதனிடம்
உயிர் வாழ்கின்றனவோ, முடிவுறும்போது
எல்லாம் எதனிடம் புகுந்து
மறைகின்றனவோ அதை ஆராய்ந்து
அறிய முயல்வாய். அதுவே பிரம்மம் (3)

என்று தைத்திரீயோபநிடதம் கூறுகிறது.

அனைத்துக்கும் எது ஆதிமூலமோ அந்தப் பரம் பொருள் படைப்புக்கு முன் நிர்க்குணப் பிரமம் எனப்படும்.

இந்நிலை 'அகண்ட பரிபூரண சுயஞ்சைதன்ய நிலை' எனப்படும். இது மனம், வாக்குக்கு எட்டாத மறைபொருள்.

இதற்கு இறைவன், கடவுள் என்ற எப்பெயரும் இல்லை. குணமும் இல்லை.

அடுத்துப் படைக்க வேண்டும் என்ற விருப்பம் பிரம்மத்திடம் எழுந்தது.

அப்போது பிரம்மத்திடம் மறைந்திருந்த, படைப்புகள் அனைத்துக்கும் அடிப்படையான குணங்கள் புலப்படத் தொடங்கின.

இந்நிலையில் இது சகுணப் பிரமம் என அழைக்கப் படுகிறது.

படைப்புகளுக்கு அடிப்படையான சகலமும் பிரமத் திடமே இருந்தன. அதை பிரமம் 'உணரும்' நிலையே சகுணப் பிரமமாகும்.

இந்த 'உணர்தலே' ஞானம் எனப்படுகிறது.

அதனால்தான் முதலில் தோன்றியது ஞானம் எனப்பட்டது.

இந்த ஞானத்தில் இருந்த குணங்களே படைப்புகளாக வெளிப்பட்டன.

சூஃபித்துவம் நிர்க்குணப் பிரமத்தை 'அஹதிய்யத்' என்றும் பரம்பொருள் குணங்களை வகுக்காமல் தொகுப்பாக உணரும் நிலையை 'வஹ்தத்'
என்றும், குணங்களை வகுத்து விவரமாக உணரும் நிலையை 'வாஹிதிய்யத்' என்றும் விளக்கும்.

ஞானம் என்பது பிரபஞ்சம் பற்றிய முழுமையான திட்டம் (Master Plan)

பைபிளும் முதலில் படைக்கப்பட்டது ஞானமே எனக் கூறுகிறது.

> ஆண்டவர் தம் படைப்பின்
> தொடக்கத்திலேயே, தொல்பழங்
> காலத்தில் எதையும் படைக்கும்
> முன்னரே, என்னைப் படைத்தார்.
> தொடக்கத்தில், பூவுலகு உண்டாகு
> முன்னே, நானே முதன் முதல் நிலை
> நிறுத்தப் பெற்றேன்

என்று ஞானம் சொல்வதாக பைபிளின் 'நீதி மொழிகள்' (8.22, 23) என்ற நூல் கூறுகிறது.

> ஆண்டவர் ஞானத்தால் பூவுலகிற்கு
> அடித்தளமிட்டார். விவேகத்தால்
> வானங்களை நிலைபெறச் செய்தார்.
> அவருடைய ஞானத்தால் நிலத்தின்
> அடியிலிருந்து நீர் பொங்கி எழுகின்றது:
> வானங்கள் மழையைப் பொழிகின்றன.
> (நீதி. 3.19, 20)

என்றும் அந்நூல் கூறுகிறது.

இஸ்லாமிய நூல்களிலும் இதே கருத்துக் காணப்படுகிறது.

> முதன் முதலாகப் படைக்கப்பட்டது
> ஞானமே

என்று இறைத்தூதர் முஹம்மத் கூறுகிறார்.

> இறைவன் முதலில் என் ஒளியையே
> படைத்தான். அந்த ஒளியிலிருந்தே
> படைப்புகள் யாவும் உண்டாயின

என்றும் அவர் கூறியிருக்கிறார். இங்கு ஞானமே ஒளி எனப்படுகிறது.

பரம் பொருள் தன்னில் அடங்கியிருக்கும் குணங்களை வகுக்காமல் தொகுப்பாக 'உணரும்' நிலையே இது. இதையே சூஃபித்துவம் 'வஹ்தத்' என்கிறது.

பரம் பொருளிலிருந்து முதலில் வெளிப்பட்டது ஞானம் என்றும், அதிலிருந்தே மற்றப் படைப்புகள் தோன்றின என்றும் இந்த முப்பெருஞ் சமயங்களும் கூறுகின்றன.

இந்த ஒற்றுமை தற்செயலானதல்ல.

இந்தக் கருத்து ஒரே மூலத்திலிருந்து வந்திருந் தாலன்றி இந்த ஒற்றுமை ஏற்பட வாய்ப்பில்லை.

'எல்லாச் சமூகங்களுக்கும் இறைத் தூதர்கள் வாயிலாக நான் வழிகாட்டியிருக்கின்றேன்' என இறைவன் கூறியதைத் திருக்குர்ஆன் தெரிவிக்கிறது.

இறைவனால் உணர்த்தப்பட்டதால்தான் இந்த முப்பெருஞ் சமயங்களும் ஒரே கருத்தைக் கூறுகின்றன.

இந்த ஒரு கருத்தில் மட்டுமல்ல இன்னும் பல கருத்துக்களில் இந்த முப்பெருஞ் சமயங்களும் ஒன்றுபடுகின்றன.

இந்தச் சமயங்களுக்கிடையே வேற்றுமைகளாகத் தெரிபவை மேலோட்டமானவை. இவற்றில் சில இடம், கலாச்சாரம் காரணமாக ஏற்பட்டவை. சில மனிதர்களால் உண்டாக்கப்பட்டவை.

(பார்க்க : பசி எந்தச் சாதி? பக்கம்: 20-25)

இவ்வாறு, இஸ்லாமிய சமூகத்தில் தோன்றிய பல கவிஞர்கள் இஸ்லாமிய அடிப்படைகள் புரியாமல் கவிதை இயற்றியுள்ளனர்.

*இன்னும் வளரும் - இன்ஷா அல்லாஹ்*